[stamp]

code No = 14



தமிழ்:

# விடியல்

குட்டி மரணம் என்ற
தூக்கத்திலிருந்து முழிச்சேன்
அழகான சூரிய ஒளி - அதுதான்
தழுவி எழுப்பியது
மகிழ்ச்சியாக எழுந்தேன் - அதும்
பாதி கனவு கண்டபடி
குட்டி மரணம் என்ற
தூக்கத்திலிருந்து எழுந்தேன்
கண்களை திறந்துப் பார்த்தேன்
கண்டேன் விடியலை
பார்க்கையில் வந்தது புன்னகை - ஆகா!
இன்று நாளோ அருமை
காற்று வந்தது - அது
குளிரை தந்தது
சூரியன் உதித்தது - அது
இளஞ்சூடை தந்தது
குளிரும் இளஞ்சூடும் - என்னை
மீண்டும் மயக்கியது

[stamp]



இரவின் கண் - அது
போய் விட்டது
விடியலின் கண் - அது
வந்து விட்டது
இயற்கையமயமான இந்த காட்சி
எனக்கு தருகிறது மகிழ்ச்சி
இலையின் முனையில் - சிறு சிறு
கோடை துளிகள்
கோடை துளிகளை ரசித்து
குடிக்கிறது பூக்கள்
விடியல் வந்து விட்டது - நான் மட்டுமல்ல
என் பூக்களும் எழுந்து விட்டது
ஆகா! அருமையான காட்சி
மகிழ்ச்சி தரும் காட்சி
இந்த நாள் இன்பமாக உள்ளது
காரணம் நான் விடியலை ரசிக்கிறேன்
அப்போது நான் ஆகாயத்தை
பார்த்தேன் மலர்ந்தேன்
பூமித்தாயோடு நன்றிகள் கூறினேன்
இன்னும் பல விடியலை
தர வேண்டும் தாயே - என
நான் வணங்கினேன்.